இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 06-03-2025

ஆளுநர் ரவிக்கு அண்ணாமலை பதில்!

இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது குறித்து - இலங்கைக் கடற்படைக்கு கண்டனம் தெரிவிக்கத் தெரியாத ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு - பா.ஜ.க. அண்ணாமலையே பதில் சொல்லி விட்டார்.

இலங்கை அரசையோ கடற்படையையோ கட்டுப்படுத்தவோ, விமர்சிக்கவோ தைரியம் இல்லாத ஆளுநர் ரவி, கச்சத்தீவு விவகாரத்தைச் சொல்லி ஒன்றிய பா.ஜ.க. அரசைக் காப்பாற்ற முயற்சித்திருக்கிறார்.

சமூக வலைதளத்தில் ஆளுநரால் வெளியிடப்பட்டுள்ள பதிவில், "ராமேஸ்வரத்துக்கு இன்று (02.03.2025) நான் சென்றிருந்தபோது, துன்பத்தில் உழலும் நமது மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளைச் சந்தித்தேன். அவர்களின் நிலை மீது நான் ஆழ்ந்த இரக்கம் கொள்கிறேன். நமது மீனவர்களின் வாழ்வாதார கவலைகளுக்கு காரணம் கடந்த 1974ஆம் ஆண்டு அநியாயமான ஒப்பந்தம்தான். கச்சத்தீவு சுற்றுவட்டார கடல் பகுதியில் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பறித்ததன் மூலம் மத்தியிலும் தமிழ்நாட்டிலும் அப்போது ஆட்சியில் இருந்த அரசுகள் பெரும் பாவத்தை இழைத்தன. அன்றிலிருந்து இன்று வரை நமது மீனவச் சமூகம் தொடர்ந்து இன்னல்களை அனுபவித்து வருகிறது.

இலங்கை அரசால் அவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இந்த நீடித்த பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு வேண்டும். இதற்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும். இந்தப் பிரச்சினையை அரசியலாக்குவதற்குப் பதிலாகவும், மத்திய அரசைக் குறை கூறுவதற்குப் பதிலாகவும், ஆக்கபூர்வமான அணுகுமுறையை மாநில அரசு மேற்கொண்டால் அது பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு பெரிதும் உதவும். எல்லாவற்றுக்கும் மேலாக, 1974இல் நடந்த தவறுக்கு சம பொறுப்பு, அன்றைய மத்திய ஆட்சி கூட்டணியில் இருந்த இன்று மாநிலத்தை ஆளும் கட்சிக்கும் உள்ளது" எனக் குறிப்பிட்டார்.

அதாவது இன்றைய பிரச்சினைக்கான காரணம் என்ன என்று சொல்வதற்கும், அதற்குத் தீர்வு காண்பதற்கும் முயற்சிக்காமல் காங்கிரஸ் கட்சியையும் - தி.மு.க.வையும் குறை சொல்வதிலேயே குறியாக இருக்கிறார் ஆளுநர்.

ஆனால் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை வெளியிட்ட அறிக்கையில், ஆளுநருக்கு பதில் சொல்லப்பட்டுள்ளது. **"இலங்கையில் புதிய அதிபர் வந்த பிறகு கைதுகள் அதிகரித்துள்ளது. மீனவப் பிரச்சினையை சட்டம் ஒழுங்காகவோ, எல்லை பிரச்சினையாகவோ அணுகாமல் மனிதாபிமான பிரச்சினையாக அணுக வேண்டும், என்றே இந்திய அரசு இலங்கை அரசிடம் வலியுறுத்தி வருகிறது. மீனவர் பிரச்சினை தொடர்பாக நான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எழுதிய கடிதத்திற்கு, அவர் எழுதிய பதில் கடிதத்தில் இந்தியா - இலங்கை கூட்டு பணிக்குழு விரைவில் நடைபெறும், என அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்"** என்று சொல்லி இருக்கிறார் அண்ணாமலை.

இலங்கை அரசுதான் மீனவர்களை கைது செய்கிறது, இந்திய - இலங்கை பேச்சை தொடங்க வேண்டும் என்று அண்ணாமலையே சொல்லி இருக்கிறார்.

இப்போதைய மீனவர் பிரச்சினை என்பது கச்சத்தீவு பகுதியில் மீன் பிடிக்கச் சென்றார்கள், செல்கிறார்கள் என்பது அல்ல. இந்திய எல்லைக் கடலுக்குள் போனாலே அவர்களுக்கு இலங்கைக் கடற்படையால் தொல்லைகள் ஏற்படுகின்றன. அதுதான் உண்மை. மொத்தத்தில் இந்திய மீனவர்களை கடலுக்குள் வரவிடாமல் விரட்டுகிறார்கள். இதனை யார் தடுக்க வேண்டும்? ஒன்றிய அரசுதானே தடுக்க வேண்டும்? இலங்கை அரசோடு அவர்கள்தானே பேச்சுவார்த்தை நடத்தி மீன் பிடி உரிமையைப் பெற்றுத் தர வேண்டும்.

இந்தியா - இலங்கை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாக வேண்டும். அது தான் நிரந்தரத் தீர்வாக அமைய வேண்டும். தமிழ்நாட்டு ஆளுநராக இருக்கிற ரவிக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்து அந்தப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

'பா.ஜ.க. அரசு அமைந்தால் ஒரு மீனவன் கூட தாக்கப்பட மாட்டான்' என்று சொன்னவர் நரேந்திர மோடி. அவரது பத்தாண்டு கால ஆட்சியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கைது செய்வதும் விடுவிக்கப்படுவதும் தொடர் கதையாக இருக்கிறது.

'இலங்கை நாட்டால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு பிரச்சினை. பாகிஸ்தான் நாட்டால் குஜராத் மீனவர்களுக்கு பிரச்சினை. இரு மாநில மீனவர்களும் இது தொடர்பாக ஆலோசித்து முடிவெடுத்து செயல்படுவார்கள்' என்று 2014 தேர்தலுக்கு முன்னதாக ராமநாதபுரத்தில் மோடி பேசினார். பத்தாண்டு காலத்தில் இப்படி ஒரு பேச்சுவார்த்தை நடந்ததா?

"2016 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை மீனவர் இடையே அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. ஒவ்வொரு மூன்று மாதத்துக்கு ஒருமுறை மீனவர்கள் சந்திப்பது என்றும், ஒவ்வொரு ஆறு மாதத்துக்கு ஒரு முறை இருநாட்டு அமைச்சர்கள் சந்தித்து பேசுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. இருநாட்டு கடற்படை அதிகாரிகளும் இதில் இடம் பெறுவார்கள் என்று சொல்லப்பட்டது. இந்தக் குழுவின் முதல் கூட்டம் 2017 ஜனவரி 2 ஆம் நாள் கொழும்புவில் நடைபெற்றது. மீனவர்கள் மீது எந்த வன்முறையும் செலுத்தக் கூடாது, உயிர் இழப்புகள் ஏற்படக் கூடாது என்று இக்கூட்டத்தில் மீனவர்கள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதனை இலங்கை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டது. ஆனாலும் இலங்கைக் கடற்படையால் அடக்குமுறை தொடர்ந்தே வருகிறது. ஏன் இந்த பேச்சுவார்த்தை தொடரவில்லை?" என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். இதற்கு ஆளுநர் பதில் என்ன?

கச்சத்தீவு பற்றி இவ்வளவு அக்கறையோடு பேசும் ஆளுநர் ரவி, **'பத்தாண்டு காலத்தில் கச்சத்தீவை மீட்க பா.ஜ.க. அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?'** என்றல்லவா கேட்டிருக்க வேண்டும்?!

மாதவரத்தில் நல உதவிகள் வழங்கல்!

சென்னை, மார்ச் 6 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி, 16 வது வட்டம் ஆண்டார்குப்பம் பகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 16 வது வட்டக்கழகத்தின் சார்பில், வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் ஏற்பாட்டில் ஆண்டார்குப்பம் பெருமாள் கோவில் தெரு சந்திப்பில், 1000 பேருக்கு அறுசுவை உணவு மற்றும் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு அறுசுவை அசைவ உணவு மற்றும் நல உதவிகளையும் வழங்கினார்கள்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி நிர்வாகிகள் கே.சிவசங்கரன், பி. தரணி, எஸ்.கருணாகரன், வட்டக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சை வடக்கு மாவட்ட கழக வழக்கறிஞர் மு.ராம்மோகன்ராஜ் தாயாரும், அரசு வழக்கறிஞர் கவிதா ராம்மோகன் மாமியாருமான மறைந்த மு.ஜெயவல்லி அம்மாள் திருவுருவப் படத்தினை கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் மு.சண்முகம் எம்.பி, மாவட்ட துணைச் செயலாளர் கோவி.அய்யாராசு, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர் சு.க.முத்துசெல்வம், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, கும்பகோணம் வழக்கறிஞர்கள் சங்க தலைவர் சா.விவேகானந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில்

400 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா !

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்று வாழ்த்தினார்!

பெரம்பலூர், மார்ச் 6-

பெரம்பலூர் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 250 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில், ஜே.கே.மஹாலிலும், குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 150 கர்ப்பிணி பெண்களுக்கு குன்னம் எம்.எஸ்.டி. திருமண மண்டபத்தில் நடத்தி வைத்து வாழ்த்தினார்.

இதில், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர், ஆலத்தூர், குன்னம் மற்றும் வேப்பந்தட்டை ஆகிய நான்கு வட்டங்களிலும் தலா 100 பயனாளிகள் வீதம் 400 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்தாவது:-

முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில், பெண்களின் வாழ்வாதாரம் முன்னேற்றமடைய, சமுதாயத்தில் பெண்கள் சுய மரியாதையுடன் வாழ, யாரையும் எதிர்பார்க்காமல் சுயமாக தொழில் தொடங்கி வாழ்வில் முன்னேற என பெண்களின் முன்னேற்றத்தை மையப்படுத்தி எண்ணிலடங்கா திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மாணவர்கள் காலையில் பசியோடு சென்று கல்வி கற்க முடியாது என்பதை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் காலை உணவு திட்டத்தை செயல்படுத்தி வருகின்றார்கள். இத்திட்டத்தை சிறப்பை உணர்ந்து, லண்டன் மாகாணத்தில் காலை உணவு திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் நம்மை ஆட்சி செய்த இங்கிலாந்து நாட்டின் தலைநகரான லண்டன் நகரில் தற்போது நம் தமிழ்நாட்டைப் பார்த்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்கள் இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலும் செயல்படுத்தி வந்த காலம் மாறி தற்போது பல்வேறு உலக நாடுகளிலும் செயல்படுத்தப்படுகிறது என்பது மிகவும் பெருமைக்குரிய செய்தியாகும்.

முதலமைச்சர் அவர்கள், மகளிர் மாதந்தோறும் தங்களுடைய குடும்ப செலவிற்கு தங்களுடைய கணவரையும், தங்களுடைய பெற்றோரையும் எதிர்பார்க்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக மாதம் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். இதனை அறிவித்த போது இதற்கு உதவித்தொகை என்று நான் பெயர் வைக்கவில்லை மாறாக உரிமைத் தொகை என்றே பெயர் வைத்துள்ளேன் என கூறினார்கள். முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள இந்தத் திட்டத்தினை பார்த்து பல்வேறு மாநிலங்களிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல மாநிலங்களுக்கும் முன்னோடி திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் உள்ளது.

அதேபோல 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்படும் புதுமைப்பெண் திட்டத்தினையும் மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தையும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இந்தத் திட்டம் அறிவிப்பதற்கு முன்பாக தமிழகத்தில் 50 சதவீத பெண்கள் மட்டுமே உயர் கல்வி பயின்று வந்தனர். இந்தத் திட்டம் அறிவித்தற்கு பின்பு தமிழகத்தில் 85% மேற்பட்ட பெண்கள் உயர்கல்வி பயின்று வருகின்றனர். பெண்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தக்கூடிய இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் செயல்படுத்தப்படுகின்றது. பெண்களுக்கு அண்ணனாக, அப்பாவாக, உங்கள் குடும்பத்தில் ஒருவராக இருந்து முதலமைச்சர் அவர்கள் மக்கள் நலத் திட்டங்களை வழங்கி வருகின்றார்கள்.

கர்ப்பிணி தாய்மார்கள் அரசின் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு, தங்களது குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து, சிறந்த கல்வியினை வழங்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, 30 நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு தூய்மைப் பணியாளர்களுக்கான நல வாரிய அட்டைகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் வழங்கினார்.

'தொடர்ந்து, குன்னம் எம்.எஸ்.டி திருமண மண்டபத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 150 கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை பொருட்களை போக்குவரத்துத்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் வழங்கி, கர்ப்பிணி பெண்களுக்காக தயார் செய்யப்பட்டிருந்த அறுசுவை உணவினை கர்ப்பிணி பெண்களுடன் அமர்ந்து சாப்பிட்டார்கள். இந்நிகழ்ச்சிகளில் பெரம்பலூர் நகர்மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் ஜெயஸ்ரீ, மாவட்ட கழக பொறுப்பாளர் தலைவர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம். ராஜ்குமார் பா.துரைசாமி குழந்தை வளர்ச்சித்திட்ட வட்டார அலுவலர் மு. செ.அருணா (வேப்பந்தட்டை) பிரேமா (பெரம்பலூர்) மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

ஜெர்மனி நாட்டில் செவிலியர்களாகப் பணிபுரிய விண்ணப்பிக்கலாம்!

சென்னை, மார்ச் 6-

ஜெர்மன் நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் பணிபுரிவதற்க்கு ஆறு மாதம் பணி அனுபவம் பெற்ற 35 வயதிற்குட்பட்ட, டிப்ளமோ மற்றும் பட்டதாரி ஆண்/பெண் செவிலியர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு B1,B2 நிலையில் இலவசமாக ஜெர்மன் மொழி பயிற்றுவித்து மாத சம்பளமாக சுமார் 2 இலட்சம் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ளவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் omclgerman2022@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 15.03.2025க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஊதியம் மற்றும் பணிவிவரங்களை அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவன வலைதளமான www.omcmanpower.tn.gov.in மற்றும் 044 22505886/ 63791 79200 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தொழில்நுட்ப ஜவுளிபொருட்கள் உற்பத்தி குறித்து தொழில் முனைவோருக்கான ஐந்து நாட்கள் பயிற்சி முகாம், கோவையில் உள்ள தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சி நிறுவனத்தில் (சித்ரா) தொடங்கியது. தமிழக மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, தமிழ்நாடு ஜவுளித்துறை அமைச்சர் காந்தி ஆகியோர் தொடங்கி வைத்தனர். கைத்தறி மற்றும் துணிநூல் துறை அரசு செயலாளர் வி.அமுதவல்லி, துணிநூல் துறை இயக்குநர் ஆர்.லலிதா, கைத்தறி துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார், சித்ரா இயக்குநர் பிரகாஷ் வாசுதேவன், மாநகராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன், மாவட்ட கழக செயலாளர்கள் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், மேயர் ரங்கநாயகி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.